


LAW & SOCIETY TRUST

# ஜனநாயகக் கலந்துரையாடல், முனைப்பான செவிமடுத்தல் மற்றும் உள்ளடங்கலான பிரசைகள் பங்கேற்பு: பெருந்தொற்றின்போதும் சமூக நெருக்கடியின்போதும் உள்ளடங்கலான குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்கல்

இலங்கை முகங்கொடுக்கும் பெருந்தொற்றின்போதும் சமூக பொருளாதார நெருக்கடியின்போதும் உள்ளடங்கலான குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்குவதும் ஜனநாயக நிறுவனங்களையும் சட்டத்தின் ஆட்சியையும் அரச பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்துவதும் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஈடுபாடுமிக்க பிரசைகள் என்ற ரீதியில், நெருக்கடிக்கான அரசாங்கத்தின் பதிற்செயற்பாடுகள் அரசியலமைப்பியலின் கோட்பாடுகளுக்கு இயைபுறுகின்றது என்பதையும் அரசாங்கம் அதிலிருந்து விலகுமிடத்து அவை கட்டுப்படுத்தப்படுவதையும் தவறான தகவல்களும் வெறுப்பினைப் பரப்பலும் தடுக்கப்பட்டு மாற்றத்தை உருவாக்குவோர் மற்றும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்கள் ஆகியோரின் நேர்மறையான ஈடுபாட்டின் மூலம் சமூக ஒற்றுமை வலுப்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்துவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு, சுகாதார மற்றும் பொருளாதாரச் சவால்களுக்கான அரசாங்கத்தின் துரித பதிற்செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்கின்ற கொள்கை விடயங்கள் மீதான பகிரங்கக் கலந்துரையாடலொன்றை மேம்படுத்துகின்ற, அடிப்படை உரிமை மீறல்களை ஆவணப்படுத்துகின்ற ஜனநாயக விழுமியங்களிலும் அரசியலமைப்புக் கோட்பாடுகளிலும் அடிப்படை உரிமைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற உருவாகிவரும் விடயங்கள் பற்றிப் பிரசைகளுக்கு உரிய நேரத்தில் உண்மைகளின் அடிப்படையிலான தகவல்களை வழங்குகின்ற உத்தியோகபூர்வமற்ற ஒரு "குடிமைக் கண்காணிப்பினைக்" கருத்திட்டம் உருவாக்கியுள்ளது. ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் வலுப்படுத்துவதற்காக ஆதரித்துவாதாடல் பிரசாரங்களை மேற்கொள்வதையும் அத்துடன் பெருந்தொற்றுக்குப் பின்னரான சூழமைவில் பிரசைகள் தங்களின் தேவைகள், பதகளிப்புக்கள் மற்றும் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதை இயலச் செய்யும் ஒரு தேவைகள் மதிப்பீட்டினை நடத்துவதையும் கருத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த அறிக்கையானது இனோமா கருணாதிலக அவர்களினால் எழுதப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தில் அவர்களின் ஈடுபாட்டினை சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (டுளுவு) மெச்சுகின்றது. இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் எல்எஸ்டி சபையினதோ அல்லது முகாமைத்துவத்தினதோ கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை.

## முகப்பு கலை: சங்கீத் மதுரவல

# கொவிட்-19 பெருந்தொற்றின் போது இலங்கையின் கல்வி பற்றிப் பேசுவோம்

## *“கல்வி என்பது அடிப்படை மனித உரிமையாகும்”- UNDHR*

கொவிட்-19 பெருந்தொற்று மனித வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் உலகளாவிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மக்களின் சுகாதாரத்திலும் வாழ்வாதாரங்களிலும் கல்வியிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. பெருந்தொற்றினால் பாடசாலைகள் கிட்டத்தட்ட முழுமையாகவே மூடப்பட்டுவிட்டன. இது மாணவர்களுக்குப் பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலைகள் கற்பதற்கான இடங்களாக மட்டுமன்றி மாணவர்கள் மற்றைய மாணவர்களுடன் இடையீடு மேற்கொண்டு அவர்களின் ஏனைய சமூகத் திறன்களை வளர்ப்பதற்கான இடமாகவும் இருக்கின்றது.[1] பாடசாலைகள் தற்காலிகமாக நீண்ட காலம் மூடப்படுதல் மாணவர்களையும் ஆசிரியர்களையும் குடும்பங்களையும் பாதித்துள்ளது. சமுதாயங்களின் ஊடே மக்களுக்கு உயர் சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் இதனால் ஏற்பட்டுள்ளன.

நாட்டின் பாடசாலைகள் உள்ளிட்ட சகல கல்வி நிறுவனங்களையும் மூடியும் அனைத்துக் கல்வி நடவடிக்கைகளையும் இடைநிறுத்தியும் பெருந்தொற்றுக்கு இலங்கை அரசாங்கம் 2020 மார்ச் 12 ஆம் திகதி பதிற்செயற்பாடாற்றியது.[2] ஆவது அலையின் பின்னர், தெரிவுசெய்யப்பட்ட தரங்களுக்காகச் சுகாதார வழிகாட்டல்களுடன் 2020 ஜுலையில் பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டன. ஆனால் புதிய கொரொனா வைரசின் தாக்கத்தினைத் தொடர்ந்து சில நாட்களிலேயே மீண்டும் பாடசாலைகள் மூடப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக, நாட்டிலே மிகவும் சன அடர்த்திமிக்க மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையான கொவிட் நோயாளர்கள் கண்டறியப்பட்டனர். எனவே, மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல பாடசாலைகளையும் கல்வி நிறுவனங்களையும் 2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதி மீண்டும் திறப்பதென அரசாங்கம் தீர்மானித்தது.[3] ஆயினும், கொவிட் 19 மூன்றாவது அலையின் திடீர் தாக்கத்தின் காரணத்தினால் நாட்டின் சகல கல்வி நிறுவனங்களும் 2020 ஒக்டோபர் 5 ஆம் திகதி மீண்டும் மூடப்பட்டன.[4]

இலங்கையின் கல்வித் துறை முன்னெப்பொழுதும் முகங்கொடுத்திராத பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தது. தேசிய பல்கலைக்கழகங்களையும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களையும் 10,266 அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளையும் மூடியமை[5] கற்பித்தல் மற்றும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளைப் பாதித்தது.[6] சூழ்நிலையின் காரணமாக அனுமதிகள், பரீட்சைகள், வைபவரீதியான பட்டமளிப்புக்கள் மற்றும் மேலதிக பாடவிதான செயற்பாடுகள் ஆகியவை தற்காலிகமாகப் பிற்போடப்பட்டன.[7] கல்வித் துறையினைச் சேர்ந்த பல ஊழியர்கள் முழு முடக்கத்தின் காரணமாகவும் பயணத் தடைகள் காரணமாகவும் தங்களின் சம்பளங்களையும் ஏனைய கொடுப்பனவுகளையும் உரிய

***பிராந்திய ஊடகவியலாளர் ஒருவரின் வாக்குமூலம் (ஆண், வயது 25, நாவலப்பிட்டி)***

*“கல்வித் துறை மிகப் பாரிய தாக்கத்தினைக் கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு பாலர் பாடசாலைக்குச் சென்ற பிள்ளை இன்று 1 ஆம் தரத்தில் அல்லது 2 ஆம் தரத்தில் இருக்கின்றார். இப்போது 5 ஆம் தரத்தில் இருக்கும் பிள்ளைகளினால் 4 ஆம் தரத்தில் இருந்து அறிவினைப் பெற முடியவில்லை. மேலும், சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் இன்னும் வந்து சேரவில்லை. பெருந்தொற்றின் காரணமாக அதனை வெளியிடுவதில் தாமதம் நிலவுகின்றது. 2020 ஆம் ஆண்டில் உயர் தரம் படித்த மாணவர்கள், பெருந்தொற்று கடைசி சில மாதங்களில் மட்டும் தாக்கம் ஏற்படுத்திய காரணத்தினால் பெருமளவு சிரமங்களுக்கு முகங்கொடுக்கவில்லை. ஆனால் 2021 ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். அவர்களுக்கு உரிய அடிப்படை இல்லை. ஒன்லைன் முயற்சி குறிப்பிடத்தக்க அளவு நடைமுறைச் சாத்தியம் அற்றதாகவும் செயற்திறனற்றதாகவும் உள்ளது. ஒன்லைன் முறைமை செயன்முறையினுள் ஒருங்கிணைக்கப்படக் கடினமானதாகும். பிள்ளைகள் ஒன்லைன் கற்றலுக்கான உளவியல் தடைகளைக் கொண்டுள்ளனர். சில மாணவர்கள் உரிய முறையில் வகுப்பில் பங்குபற்றுவதில்லை. இந்த நிலைமை ஒன்றரை வருடங்களாகக் கல்வித் துறையில் பாரிய இடைவெளியினை உருவாக்கியுள்ளது. அறிவு இற்றைப்படுத்தல் மிகவும் பலவீனமானதாக உள்ளது. மேலும், விளையாட்டுப் போன்ற மேலதிகப் பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதில்லை. ஒன்லைன் கல்விக்கான செலவும் உயர்வானதாக உள்ளது. சில பிரதேசங்களில் சிறந்த இணைய இணைப்பு இல்லை. குடும்பங்களிடம் உபகரணங்களும் வசதிகளும் இல்லை. சில மாணவர்கள் 2019 ஆம் ஆண்டில் சட்டமானிக் கற்கையினைப் பூர்த்திசெய்துள்ளனர். ஆனால் இச்சூழ்நிலையின் காரணமாக அவர்களால் இன்னும் சட்டத்தரணிப் பரீட்சையினையும் பயிலுனர் காலப்பகுதியினையும் பூர்த்திசெய்ய முடியவில்லை. பல பரப்புக்களில் தாமதம் நிலவுகின்றது. கல்வித் துறையில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய திட்டங்கள் இல்லாதிருக்கின்றன.*

நேரத்தில் பெற்றுக்கொள்வதில் பல சவால்களுக்கு முகங்கொடுத்தனர். கல்வி நிறுவனங்களில் நாட் சம்பளம் பெறும் ஊழியர்களும் பாதிக்கப்பட்டனர்.

கொவிட்-19 இன் காரணமாக கல்வியினையும் பயிற்சியினையும் ஒன்லைனில் வழங்குவதற்கு ஆசிரியர்களும் மாணவர்களும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஒன்லைன் கல்வி என்பது ஒரு புதிய கற்பித்தல்/கற்றல் அணுகுமுறை என்பதாலும் ஆசிரியர்களும் மாணவர்களும் இதனைக் கையாளுவதற்குப் பூரண ஆற்றல் பெறாமல் இருந்தமையாலும் இலங்கையின் கல்வித் துறையில் இந்த எண்ணக்கரு ஒரு பாரிய சவாலாக அமைந்திருந்தது. அவர்கள் புதிய தொழில்நுட்பத்தில் பரிச்சயம் அடைந்திருக்கவில்லை. அவர்களிடம் தேவையான உபகரணங்களும் இணைய இணைப்பும் இருக்கவில்லை. அத்துடன் நவீன கருவிகளையும் தொழில்நுட்பத்தினையும் பயன்படுத்துவதற்கான திறன்கள் இருக்கவில்லை.[8] இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் பல சவால்களுக்கு முகங்கொடுத்தனர்.

> *சமுதாயப் பணியாளர்/பயிர்ச்செய்கையாளரின் வாக்குமூலம்*
> *(பெண், வயது 46, கெக்கிராவ, அநுராதபுரம்)*
>
> *“இது எனது கிராமத்தில் உள்ள குடும்பங்களையும் பாதிக்கின்ற பெரிய பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது. பெருந்தொற்றினால் பாடசாலைகள் மூடப்பட்ட பின்னர், அதிகமான கற்றல் முன்னெடுப்புக்கள் ஒன்லைன் முறைக்கு மாற்றப்பட்டன. ஒன்லைன் கற்றலுக்கு அன்ட்ரொய்ட் தொலைபேசி, இணைய இணைப்பு மற்றும் வீரியமிக்க சமிக்ஞை உள்ளிட்ட பல வசதிகள் எமக்குத் தேவைப்படுகின்றன. கிராமத்தில் உள்ள அதிகமான குடும்பங்களிடம் இந்தத் தொலைபேசிகள் அல்லது அவற்றினை வாங்குவதற்கான நிதி வசதிகள் இல்லை. ஒன்லைன் கல்விக்குக் கூட இணையத் தரவுக்கான செலவு அதிகூடியதாக உள்ளதுடன் அதிகமான சந்தர்ப்பங்களில் இந்தச் செலவினை மக்களால் செலுத்த முடியாதுள்ளது. மற்றைய பிரதான பிரச்சினை இணைப்புநிலை உள்ளடக்கமும் இணைப்புக்கான சமிக்ஞை கிடைக்காமையுமாகும். இந்தத் தொலைபேசி அழைப்பினை எடுப்பதற்குக் கூட இணைப்புநிலை உள்ள ஒரு குறிப்பிட்ட இடத்திற்கே நான் வரவேண்டியுள்ளது. எனது மகள் 5 ஆம் தரத்தில் கற்கின்றார். அவர் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்றார். அவருக்குத் தனியார் வகுப்புக்களின் உதவியும் தேவைப்படுகின்றது. இதற்காக, அவர் ஒன்லைன் வகுப்புக்கும் தோற்றவேண்டியுள்ளது. அவர் கூறுகின்றவற்றினை வைத்துப் பார்க்கையில், ஒன்லைன் அடிப்படையிலான மெய்நிலைக் கல்வி கடினமானதாகவே இருக்கின்றது. வசதிப்படுத்தல் சிரமங்கள் காணப்படுவதுடன் கற்றலில் கவனத்தினைச் செலுத்துவதிலும் சிரமங்கள் காணப்படுகின்றன. சில குடும்பங்களில் இரண்டு முதல் மூன்று வரையான மாணவர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் ஒன்லைன் கல்வியில் ஈடுபடவேண்டியுள்ளது. ஒரு தொலைபேசியினை வைத்து ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குவது கடினமானதாகவுள்ளது. சில பிரதேசங்களில் ஒரு தொலைபேசியினை வைத்துக்கொண்டு சில மாணவர்கள் ஒன்றாக வகுப்பில் இணைய முயற்சிப்பதை நான் பார்த்துள்ளேன்”.*

## தகவல் தொழில்நுட்பம் (IT) பற்றிய அறிவின்மை

நேருக்கு நேராகக் கற்பிக்கும் முறை, ஞாபகப்படுத்திக் கற்றல், இடையீடுமிக்க கற்றல் செயன்முறைகள் ஆகியவை இலங்கைக் கல்வி நிறுவனங்களில் வேரூன்றியுள்ளன. ஒன்லைன் கல்வி இலங்கை மாணவர்களுக்கு ஒரு புதிய கருத்தியலாகும். அதேபோன்று ஆசிரியர்களுக்கும் புதிய கருத்தியலாகும். எனவே, இந்தப் பாரம்பரியத்தினை உடைத்து மாணவர்களுக்குப் புத்தாக்கமிக்க ஒன்லைன் சூழலில் கற்பிப்பது கடினமானதாகும். ஒன்லைன் கருத்தியலை அறிமுகப்படுத்தி அதனை மேம்படுத்துவதில் பெருந்தொற்றுக்கு முன்னைய சூழலிலும் கூட இலங்கை மந்த கதியிலேயே இருந்தது. ஒன்லைன் கற்றல் தொடர்பாகவும் கற்பிப்பதற்கான தளமாக தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் அதிகாரிகளிடம் ஒரு விரிவான கொள்கை அல்லது அணுகுமுறை இருக்கவில்லை. அவர்கள் ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தில் உரிய பயிற்சியினை வழங்கவில்லை. மேலும் சகல பாடசாலைகளுக்கும் பிராந்தியங்களுக்கும் தேவையான உபகரணங்களையும் உட்கட்டமைப்பினையும் கிடைக்கச் செய்யவில்லை.[9] வழமையாகவும் தேர்தல் வாக்குறுதியாகவும் மாணவர்களுக்கு டெப்லட் கணனிகள் வழங்கும் உத்தரவாதம் வழங்கப்பட்ட போதிலும் அவற்றினைச் செயற்திறன்மிக்க முறையில் பயன்படுத்துவதை இயலுமாக்குவதற்காக அவர்களுக்கான உதவி முறைமைகள் மதிப்பிடப்படவில்லை (இணைய வசதி மற்றும் கிரமமான மின்சார வசதி).

ஆசிரியர்களின் மீது சுமத்தப்பட்ட மேலதிக சுமை காரணமாகப் பல ஆசிரியர்கள் சவாலுக்கு முகங்கொடுத்ததுடன் ஒன்லைன் வகுப்புக்களை வடிவமைத்து வழங்குவதிலும் அவர்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். இதேபோன்று, நவீன தொழில்நுட்பம் இல்லாத காரணத்தினால் பாடசாலை மாணவர்களும் சவாலுக்கு முகங்கொடுத்தனர். தேவைப்படும் சாதனங்களுக்கான மற்றும் இணையச் சேவைக்கான அணுகல் இல்லாமையினாலும் அவர்கள் சவால்களுக்கு முகங்கொடுத்தனர். இணைய இணைப்புக்களுக்கான கட்டணத்தினைச் செலுத்துவதற்குப் பல குடும்பங்களிடம் வசதிகள் இல்லாதிருக்கின்றன. அத்துடன் குடும்பங்களில் பல பிள்ளைகள் இருக்கையில், அனைத்துப் பிள்ளைகளுக்கும் வழங்குவதற்கான சாதனங்களும் குடும்பத்தில் இருக்காது. சொற்பமான தகவல் தொழில்நுட்ப அறிவினைக் கொண்டுள்ள மாணவர்கள் அவர்களின் கற்கையினை ஓரளவுக்கு முகாமைத்துவம் செய்கின்றனர். ஆனால் இவர்களில் அதிகமானவர்கள் இந்த முறைமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், பல பெற்றோர்களுக்கு நவீன தொழில்நுட்ப அறிவு இல்லை என்பதுடன் அவர்களின் பிள்ளைகளுக்கும் அவர்களினால் உதவ முடியாதுள்ளது.[10] இளம் பிள்ளைகளாகவும் அமைதியாக இருந்து கவனம் செலுத்த முடியாத பிள்ளைகளாகவும் இருக்கும் மாணவர்களின் அவதானத்தினை ஈர்ப்பது கடினமானதாக இருப்பதால், கீழ் மட்ட வகுப்புக்களில் பிள்ளைகளை வைத்திருப்பவர்கள் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

## *உரிய சாதனங்கள் இன்மை*

பல மாணவர்களால், குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களால் ஒன்லைன் கல்விக்கான சரியான உபகரணங்களை வாங்க முடியவில்லை.[11] அநேகமான குடும்பங்களில், ஆகக்கூடியது ஸ்மார்ட் தொலைபேசி ஒன்றும் சாதனம் ஒன்றும் உள்ளன என்பதுடன் பல பிள்ளைகள் உள்ள குடும்பங்களுக்கு இது போதாமல் உள்ளது. ஏனெனில் அதிகமான கற்பித்தல் அமர்வுகள் சம காலத்தில் இடம்பெறுகின்றன. இது உடன்பிறப்புக்களுக்கு இடையில் பல பிரச்சினைகளை உருவாக்குவதுடன் பெற்றோர்கள் மீது மேலதிக சுமை ஒன்றினை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் குடும்பத்தினுள் உள்ள சூழல் சிதைவடைந்து காணப்படுகின்றது. உயர் சமூக வருமான மட்டத்தினையும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட குடும்பங்களில் இருந்து மாணவர்களை உள்வாங்கும் அதிசிறப்புமிக்க பாடசாலைகளினால் இந்தப் பிரச்சினைகளைச் சமாளிக்கக்கூடியதாகவுள்ளது. ஆனால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் செல்லும் வரையறுக்கப்பட்ட உட்கட்டமைப்பினைக் கொண்ட சிறப்புரிமைகள் குறைந்த பாடசாலைகள் பாரிய பிரதிகூலத்துக்கு உள்ளாகுகின்றன.[12]

## *இணையத் தரவுப் பிரச்சினைகள்*

இணையத் தரவுகளைப் பெறுவதற்காகப் பணத்தினைக் கேட்பதன் மூலம் பெற்றோர்கள் மீது பிள்ளைகள் மேலதிக அழுத்தத்தினை ஏற்படுத்துகின்றனர். தரவுகளுக்கான கட்டணங்கள் மிக உயர்வாக உள்ளன. பெருந்தொற்றின் காரணமாகப் பெற்றோர்கள் முழுவதுமாக அல்லது பகுதியாகத் தமது வருமானங்களை இழந்துள்ள காரணத்தினால் முழுமையான இணைய இணைப்புப் பொதியினை வாங்குவதற்குப் பெற்றோர்களினால் பணம் செலுத்த முடியாதுள்ளது. மேலும் சாதனங்களும் இணையத் தரவுகளும் இருந்தபோதிலும் மோசமான இணைய இணைப்பு உள்ளடக்குகை காரணமாகப் பல மாணவர்களினால் தங்களின் கல்வியினைத் தொடர முடியாமல் உள்ளது.[13] சில கிராமப் பிரதேசங்களைச் சேர்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும் இணைய இணைப்புக் கிடைக்கும் ஒரே இடம் என்ற காரணத்தினால் மலைக்குன்றின் மீது ஏறியிருக்கின்றனர் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உதாரணமாக, இணைய சமிக்ஞையினைத் தேடி போகிடிவாயவினைச் சேர்ந்த ஆசிரியர்களும் ஏறத்தாழ 45 பாடசாலை மாணவர்களும் 2 மைல்களுக்கும் மேல் நடந்து குன்றொன்றின் மேல் ஏறியிருக்கின்றனர்.[14] இந்தச் சவால்கள் கல்விக்கான மாணவர்களின் சமமற்ற அணுகல் காரணமாக அவர்களுக்கிடையில் இடைவெளிகளை உருவாக்கும்.

*சமுதாயப் பணியாளர், பயிர்ச்செய்கையாளர் ஒருவர் வழங்கிய வாக்குமூலம் (பெண், 61 வயது, கெக்கிராவ, அநுராதபுரம்)*

*"கல்வித் துறை வீழ்ச்சியடைந்துள்ளது. எனது மகளின் மூத்த மகன் பாடசாலையில் 7 ஆம் தரத்தில் கல்வி கற்கின்றார். இந்நாட்களில் அவர்களின் அதிகமான கல்விச் செயற்பாடுகள் ஒன்லைனிலேயே நடத்தப்படுகின்றன. அவர்களிடம் தொலைபேசியும் ஏனைய வகை உபகரணங்களும் இல்லை. ஒன்லைன் வகுப்பினை நடத்துவதற்கு அவர்களுக்கு அன்ட்ரொய்ட் தொலைபேசி தேவை. ஆதிகமான சந்தர்ப்பங்களில் நான் எனது தொலைபேசியினை அவருக்கு வழங்குகின்றேன். நான் அதிகமான சமுதாயச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றேன். அத்துடன் நாங்கள் சில ஒன்லைன் கூட்டங்களையும் நடத்துகின்றோம். அச்சந்தர்ப்பத்தில் எங்கள் இருவருக்கும் தொலைபேசி தேவைப்படுவதே பிரச்சினையாகின்றது. அத்துடன் இணைப்புத் தொடர்பாகவும் சமிக்ஞை தொடர்பாகவும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. சில வேளைகளில் சமிக்ஞையினைப் பெறுவதற்காக நான் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கின்றது. கல்வித் துறையில் இச்சிரமங்களை நிவர்த்திசெய்வதற்கான உரிய திட்டமோ அல்லது தீர்வோ இல்லை. ஆசிரியர்களும் இவ்வகையான கற்றல் முறையினால் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுகின்றனர். கடந்த வருடம், மாணவர்களுக்கு அச்சிடப்பட்ட குறிப்புக்களை அனுப்புவதற்கு ஆசிரியர்களினால் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சில ஆசிரியர்கள் வட்ஸ்அப் மூலமாக பாடப் பயிற்சிகளை (வேர்க்லிஸ்ட்) அவர்களின் தொலைபேசிகளுக்கு அனுப்பி அவற்றினைப் பின்தொடர்ந்த போதிலும் அவர்களால் உரிய முறையில் அதனைத் தொடரமுடியவில்லை. 2020 மார்ச் மாதத்தில் இருந்து சகல தரங்களிலும் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. இது அடுத்த தலைமுறையிலும் மிகப் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்த முடியும்.. அத்துடன் சாதாரண தர மற்றும் உயர் தர மாணவர்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். சிலர் அவர்களின் கல்வியினைக் கைவிட்டு தொழில் ஏதாவது செய்ய முயற்சிக்கின்றனர். ஆனால் சிலர் பல்கலைக்கழகங்களுக்குச் செல்கின்றனர். அவர்களுக்குப் பிரச்சினை இல்லை. அவர்கள் தொடர்ந்து உரிய முறையில் அவர்களின் வேலையினைத் தொடர்கின்றனர்."*

## கற்றல் வரம்புகள்

கல்வி என்பது அறிதல் சார்ந்த மற்றும் பகுப்பாய்வு சார்ந்த திறன்களையும் மேலதிகப் பாடவிதானச் செயற்பாடுகளையும் திறன் பயிற்சிகளையும் உள்ளடக்கிய பரந்த கருத்தியலாகும். இது சமூக இடையீடுகளுக்கான அடிப்படையினையும் வழங்குகின்றது. கொவிட் காரணமாக வெளிக்களச் செயற்பாடுகளில் இருந்தும் சமூக இடையீடுகளில் இருந்தும் ஆட்களுக்கிடையிலான தொடர்பாடல்களில் இருந்தும் நடைமுறைப் பயிற்சி அமர்வுகளில் இருந்தும் மாணவர்கள் தடுக்கப்பட்டுள்ளனர்.[15] தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்கள் போன்ற தொழில்ரீதியான நிறுவனங்களையும் பெருந்தொற்றுப் பாதித்துள்ளது. இந்த நிலையங்களில் உள்ள போதனாசிரியர்களும் மாணவர்களும் செயற்திறன்மிக்க ஒன்லைன் பயிற்சியினை நடத்துவதற்கான இணைய மற்றும் ஹாட்வெயார் சாதனங்கள் மற்றும் மென்பொருள் தளங்களுக்கான அணுகல் ஆகியவற்றை எப்போதும் கொண்டிருப்பதில்லை.[16] மேலும், ஒன்லைனில் நடைமுறைப் பயிற்சியினை வழங்குவது மிகவும் கடினமானதாகும், இல்லையெனில், சாத்தியமற்றதாகும்.

வட்ஸ்அப் போன்ற சமூக ஊடகத் தளங்களின் மூலமாக விரிவுரைகளையும் ஒப்படைகளையும் வழங்குவதற்கு பாடசாலை ஆசிரியர்கள் உள்ளிட்ட போதானாசிரியர்கள் நிர்ப்பந்திக்கப்படுவதால் மாணவர்களை மையப்படுத்திய அணுகுமுறையினை ஒன்லைன் தளம் வழங்குவதில்லை. சிலவேளைகளில், நேருக்கு நேரான பயிற்சிகள் மீளத் தொடங்கியதும் பாடசாலை ஆசிரியர்களும் போதனாசிரியர்களும் விரிவுரைகளை மீண்டும் நடத்தவேண்டியிருக்கும். ஏனெனில் முழு முடக்கத்தின் போது எல்லா மாணவர்களினாலுமே டிஜிட்டல் கற்றலை அணுக முடியவில்லை. இந்த அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொண்டு பார்க்கையில், பெருந்தொற்றின் போது விசேட செயற்பாடுகளின் மூலம் வீட்டில் உள்ள மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவதற்கான ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் சிறந்த முயற்சிகளைத் தாண்டி கற்றலின் தரம் பாதிக்கப்பட்டு மாணவர்களின் ஆற்றலும் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

***கொழும்பிலுள்ள தனியார் கம்பனி ஒன்றைச் சேர்ந்த பௌதிகவள முகாமையாளர் ஒருவரின் வாக்குமூலம் (ஆண், வயது 34, பண்டாரவளை)***

*"உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் அதிகமானவர்கள் அதீத அழுத்தத்திற்கு முகங்கொடுக்கின்றனர். இச்சூழ்நிலையினால் எல்லாமே பிற்போடப்பட்டுள்ளன. அவர்கள் தொடர்ந்து கவனம் குவிப்பதில் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். தற்போது அனுமதி பெற்றுச் சென்றுள்ள மற்றும் அனுமதிக்காகக் காத்திருக்கின்ற பல்கலைக்கழக மாணவர்களைப் பொறுத்த அளவிலும் இதே நிலைமையே காணப்படுகின்றது. எதிர்காலத்தில் பாடசாலையில் வகுப்புக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குப் பாடசாலை மாணவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றுவது மிக முக்கியமானதாகும். பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடிய ஓர் அத்திவாரத்தினையாவது இது உருவாக்கும்.."*

## முக்கியமான பரீட்சைகள் - கபொத சாதாரண தரம் மற்றும் உயர் தரம்

நீண்ட கால முழு முடக்கத்தினால் அரசாங்கம் முகங்கொடுக்கும் பிரதான சவால்களில் ஒன்றாகப் பரீட்சைகளை நடத்துவது அமைந்துள்ளது. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதானியான சனத் பூஜித குறிப்பிடுகையில், 2020 மே 3 ஆம் திகதி உயர் தரப் பரீட்சைகளைத் தொடங்குவது எனத் தான் ஒரு நியாயமான தீர்மானத்தினை மேற்கொள்வதாகத் தெரிவித்தார். அதன் அடிப்படையில், மே மாதம் நடத்தப்படவிருந்த உயர் தரப் பரீட்சைக்காகக் கல்வி அமைச்சு ஒன்லைன் விண்ணப்ப முறைமையினை அறிமுகப்படுத்தியது. எனினும் 2020 ஜூன் மாதத்தில் நிலவிய சூழ்நிலை காரணமாக உயர்தரப் பரீட்சையினையும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையினையும் செப்டெம்பரில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் ஜூலை 6 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பித்ததும் மேற்குறிப்பிட்ட பரீட்சைகளுக்கான திகதிகள் பற்றிய ஓர் இறுதிக் கலந்துரையாடலை நடத்தப்போவதாகக் கல்வி அமைச்சு குறிப்பிட்டது.[17] இந்தத் தீர்மானத்தின் நிச்சயமற்றதன்மை மாணவர்களில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. இறுதியில், இரண்டு பரீட்சைகளும் 2020 ஒக்டோபர் வரை பிற்போடப்பட்டு முழு முடக்கக் காலப்பகுதியின் போது நடத்தப்பட்டன.

அனுமதி அட்டையே மாணவர்களுக்கான பயண அனுமதிப் பத்திரமாக இருந்தது. மாணவர்களுக்கான விசேட போக்குவரத்துச் சேவையினை அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது.[18] தாமதிக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் 2021 மே 4 ஆம் திகதி வெளியிடப்பட்டன. பெருந்தொற்றின் காரணமாக விண்ணப்பச் செயன்முறை மாற்றப்பட்டது. அரசாங்கம் ஒன்லைன் முறைமையினை அறிமுகப்படுத்தி ஒன்லைனில் மாத்திரம் விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டது.[19] அதேபோன்று, கபொத சாதாரண தரப் பரீட்சையும் பிற்போடப்பட்டது. இறுதியில் 8 பாடங்களின் பெறுபேறுகள் மட்டுமே வெளியிடப்பட்டன. நடைமுறைப் பரீட்சைகளின் தாமதத்தின் காரணமாக அழகியல் பாடங்களின் பெறுபேறுகளை வெளியிட முடியவில்லை.

***கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் உள்ள மனித வள முகாமையாளர் ஒருவரின் வாக்குமூலம் (ஆண், 30 வயது, பெல்மதுளை)***

*"கல்வியின் இயக்கவியல்கள் சமூக அடுக்கமைவாக்கத்தினைக் கட்டமைக்கின்றன. மெய்நிகர்க் கல்வி என வருகையில் மாணவர்கள் வகுப்பறை அடிப்படையிலான கல்வியினை விட மிகவும் பின்தங்கியவர்களாக மாறுகின்றனர். வகுப்பறையில் ஆசிரியர் ஒருவர் கற்பிக்கையில் மாணவர்களின் இடையீட்டினைப் பெறுவதற்குப் பல வித்தியாசமான முறைகள் இருக்கின்றன. ஒன்லைன் தளங்கள் அந்த இடையீட்டினை மட்டுப்படுத்துகின்றன சுதந்திரமாகத் தொடர்பாடுவதற்கான மற்றும் கற்பதற்கான தளம் கல்வித் துறையில் ஏற்பட்ட இந்த மாற்றத்துடன் சுருங்கிவிட்டது. கல்வி பல்அத்தியாயங்களைக் கொண்டது. ஒவ்வோர் அத்தியாயமும் மாணவர்கள் கற்பதையும் புரிந்துகொள்வதையும் மேம்படுத்துவதற்கு உதவுகின்றன. ஆனால், இப்போது அவர்கள் ஒன்லைனில் கற்றலின் முதல் அத்தியாயத்தினை மட்டுமே கொண்டுள்ளனர்"*

எதிர்காலத்தில் பல்கலைக்கழகப் பரீட்சைகளை ஒன்லைனில் நடத்துவதை நோக்கிக் கவனம் திரும்பியுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) தலைவரான சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார்.[20] பல்வேறு மன்றுகளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மாற்று மதிப்பீடு ஒன்றினை நடத்தி அதிக தாமதமின்றி அரச பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான வழிகாட்டல்கள் பற்றிய ஒரு விசேட சுற்றுநிருபத்தினை வெளியிட்டது.[21] இதன் விளைவாக, பரீட்சைகள் உள்ளடங்கலாகப், பாரிய தாமதங்கள் இன்றிச் சம்பந்தப்பட்ட கல்வி நடவடிக்கைகளை அரச பல்கலைக்கழகங்களினால் நடத்தக்கூடியதாக இருந்தது.

***அரச பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரின் வாக்குமூலம் (ஆண், 38 வயது, வாழைச்சேனை, மட்டக்களப்பு)***

*"பல்கலைக்கழக மட்டத்தில், செயன்முறையினைத் தொடர்வதற்கு பல்வேறு முன்னெடுப்புக்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, நான் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் பணியாற்றுகின்றேன். மாணவர்களுக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் இலவசத் தளத்தினை வழங்குவதற்காக அவர்கள் Zoom உடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டு இலவச இணைய வசதிகளையும் வழங்கினர். ஆனால் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் போதிய வசதிகள் இல்லை என்பதுடன் தொழில்நுட்பம் பற்றிய அறிவும் இல்லை. மேலும் அவர்கள் அன்ட்ரொய்ட் தொலைபேசிகள் மற்றும் தரவுக் கட்டணங்கள் போன்ற வசதிகளுக்காகவும் செலவழிக்க வேண்டியிருந்தது. சில ஆசிரியர்கள் கற்கைத் தொகுதிகளையும் பத்திரங்களையும் தயாரித்து அச்சிட்டனர். அச்சிடல் மற்றும் விநியோகச் செலவுகள் யாரின் உதவியும் இன்றி அவர்களினாலேயே செலவழிக்கப்பட்டன. முழு முடக்கத்தின் காரணமாக போட்டோப்பிரதி செய்யும் நிலையங்கள் மூடப்பட்ட காரணத்தினால் நான் சிலவேளைகளில் அவற்றினைத் தேடிக் கஷ்டப்பட வேண்டியிருந்தது. மாணவர்களுக்கான சகல பாடங்களையும் பகிர்வதற்காக அரசாங்கம் ஒரு மும்மொழித் தளத்தினை முன்னெடுக்கலாம் என நான் நினைக்கின்றேன். பாடசாலைப் பாடவிதானம் மாறவில்லை. எனவே ஒன்லைன் வகுப்புக்களை நடத்துவது இலகுவானதாகும். செலவு குறைவானதாக இருக்கும். அது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிவாரணத்தினை ஏற்படுத்துவதாக அமையும். அத்துடன் தொலைக்காட்சி, வானொலி மற்றும் யூடியுப் ஆகியவற்றினை, இதே உள்ளடக்கத்தினை மாணவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான தளங்களாகப் பயன்படுத்தவும் முடியும். போர்த்துக்கலில் பெருந்தொற்றின்போது இவ்வாறு கல்வி முறைமை நடத்தப்பட்டது என என்னிடம் கூறப்பட்டது."*

## இணையத்தினைத் தவறாகப் பயன்படுத்தல்

பல பாடசாலை மாணவர்கள் இணையத்தினைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர் என அறிக்கையிடப்பட்டுள்ளது. பாடசாலை ஆற்றுப்படுத்துனர்கள் வழங்கிய அறிக்கைகளின் அடிப்படையில், சில மாணவர்களுக்கு, குறிப்பாக பதின்பருவ மாணவ மாணவிகளுக்குப் பெருந்தொற்று இணையத்திற்கான கட்டற்ற அணுகலை வழங்கியிருந்தது.[22] பல இலங்கைப் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளின் அணுகலைக் கட்டுப்படுத்துவதும் தொலைபேசிகள், டெப்லட்கள் மற்றும் மடிக்கணினிகள் போன்ற இலத்திரனியல் சாதனங்களுக்கு கட்டற்ற அணுகலை வழங்குவதில்லை என்பதும் புரிந்துகொள்ளப்பட்ட ஒன்றாகும். இலத்திரனியல் கருவிகளைப் பெற்றுக்கொள்ளக் காத்திருந்த மாணவர்களுக்கு ஒன்லைன் கல்வி அதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியது.[23] பல பதின்பருவ மாணவிகளும் மாணவர்களும் பெருந்தொற்றின் போது வளர்ந்தோர் பயன்படுத்தும் இணையத்தளங்களுக்கும் கேமிங் தளங்களுக்கும் அடிமையாகினர்.[24] மாணவர்களில் சிலர் தங்களின் பெற்றோருக்குத் தெரியாமல் சமூக ஊடகங்களின் ஊடாக விரும்பத்தகாத உறவுகளை வளர்த்துக்கொண்டனர். இவ்வாறான ஆபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமையினால் மோசடிக்கும் ஆசைகாட்டி மோசம் செய்யப்படும் நிலைக்கும் பிள்ளைகள் ஆளாகியுள்ளனர். இது அவர்களின் வாழ்வினைச் சமரசம் செய்துள்ளது.[25]

## பௌதிக மற்றும் உளவியல் மற்றும் கற்பித்தல் சவால்கள்

கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளாக இலங்கை அரசாங்கம் பௌதிக இடைவெளியினைப் பற்றி மக்களுக்கு ஆலோசனை வழங்கி உயர் அபாயநேர்வுப் பிரதேசங்களை முடக்கி, ஊரடங்கினை அமுல்படுத்தி நோய்த்தடைகாப்பினையும் அமுல்படுத்தியது. பொதுவாக, கல்வி நிறுவனங்களில் பாடசாலை மாணவர்கள் உயர் மட்டத்திலான சமூக மற்றும் பௌதிகத் தொடர்பினைப் பேணுகின்றனர். தனிமைப்படுத்தல் மற்றும் சமூக இடைவெளி ஆகியவற்றினைத் திடீரென விதித்தமை உளவியல் மனவழுத்தத்தினைச் சுட்டிக்காட்டும் எண்ணற்ற நோய்க்குறிகளை மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் உருவாக்கும் நிலையினை ஏற்படுத்தியது. குறிப்பாக, கொவிட் பரவலைத் தடுப்பதற்குப் பௌதிக இடைவெளி அவசியமான ஒரு நடவடிக்கையாகும். ஆனால் பௌதிக இடைவெளி நீண்டகால மோசமான உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதைச் சான்றுகள் காட்டுகின்றன[26]. குறிப்பாக, பாதிக்கப்படுவோர் பாதிப்புறுநிலையில் உள்ள பிள்ளைகளும் வளர்ந்தவர்களுமாவர். இவர்கள் கொவிட் தொற்றுக்குப் பின்னரான மீளல் கட்டத்தில் உளவியல் ரீதியான மனவழுத்த வெளிப்பாடுகளை அனுபவிக்க முடியும். இவர்களுக்கு இடையீடு மேற்கொண்டு புதிய இணைப்புக்களை உருவாக்குவது கடினமானதாக இருக்கலாம்[27] பாடசாலைகள் எதிர்பாராதவிதமாக மூடப்பட்டு எல்லையின்றி அது நீட்டிக்கப்பட்ட காரணத்தினால் மாணவர்கள் கற்றுக்கொள்ள உதவுவதற்காக அவர்களுடன் உறவுகளைப் பேணும் சவால்களுக்கு ஆசிரியர்கள் முகங்கொடுத்த அதேவேளை அவர்களின் நிர்வாக மற்றும் பாடவிதானத் திட்டமிடல் ஆகிய கடமைகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. பாடசாலை மூடப்பட்ட ஆரம்ப நாட்களில், அந்தச் சூழ்நிலை ஆசிரியர்களுக்கு மிகவும் குழப்பமிக்கதாக இருந்ததுடன் அவர்கள் தீவிரமான மன அழுத்தத்திற்கும் ஆளாகினர்.

> ***அரச பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரின் வாக்குமூலம் (ஆண், 38 வயது, வாழைச்சேனை, மட்டக்களப்பு)***
>
> *“மிகப் பெரிய சவாலாகக் காணப்பட்டது நடமாட்ட சுதந்திரமாகும். முழு முடக்கம் இல்லாதிருந்தாலும் கூட வெளியில் செல்வதற்குப் பலரும் அச்சப்பட்டனர். குறிப்பாக, சிறுவர்களும் இளைஞர்களும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர். மேலதிகப் பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கவில்லை. மேலும் இளம் நபர்கள் அவர்களின் தொலைபேசிகளுக்கு அடிமையாகியிருந்தனர். அவர்களின் தூங்கும் பாங்குகளும் மாறிவிட்டன. இவர்களில் சிலர் கேம் விளையாடுவதற்கு அடிமையாகினர். இவர்களின் சிந்தனைப் பாங்குகளும் மாறிவிட்டன.”*
>
> *“இந்த அம்சம் தொடர்பாகக் குறைவான கரிசனையே காணப்பட்டதுடன் இதில் யாரும் கவனம் செலுத்தவில்லை. சுகாதாரத் துறையிடம் மனநல சுகாதாரப் பிரச்சினைகளைக் கையாளுவதற்குப் போதிய ஆற்றல் இல்லை. வழிகாட்டல் வழங்கி உதவக்கூடியவர்களும் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.”*

ஆசிரியர்களும் கற்பிப்பவர்களும் அவர்களின் கற்பித்தல் அமர்வுகளைப் பொதுவாக அதிகாலையில் ஆரம்பித்து பின்னிரவு வரை தொடர்கின்றனர். இந்த அட்டவணைகளின் காரணமாக பல உயர் தர மாணவர்கள் அவர்களின் உயிரியல் வழமையில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாகப் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். மாணவர்கள் இரவில் தூங்காது பகல் முழுவதும் தூங்கி ஒழுங்காக உணவு உண்ணாமல் இருப்பதாகப் பெற்றோர்கள் முறைப்பாடு செய்தனர். சில மாணவர்கள் ஒன்லைன் வகுப்பில் அவர்களின் வருகையைப் பதிவு செய்துவிட்டு ஒன்லைன் வகுப்பில் ஈடுபட்டிருப்பதாகப் பாவனை செய்து வீடியோக்களைப் பார்ப்பதிலும் ஈடுபட்டனர். உரிய வழிகாட்டலும் மேற்பார்வையும் இல்லாத காரணத்தினால், இவ்வகையான நடைமுறைகள் மாணவர்களின் திறன்கள் பரீட்சிக்கப்படுதல் போன்ற உள்ளிட்ட பல்வேறு விடயங்களின்போது அவர்கள் மனவழுத்தத்திற்கு உட்படும் நிலைக்கு இட்டுச் செல்லலாம். கற்பித்தல் மற்றும் கற்றல் ஆகியவற்றின் சாதாரண பாங்குகள் கொவிட் பெருந்தொற்றின் காரணமாக மோசமான பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டு மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் ஒரேவிதமான உளவியல் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன. தமது கற்றல் சூழலில் ஏற்பட்ட சடுதியான மாற்றத்தின் காரணமாக இளம் பிள்ளைகள் விரக்தி, எரிச்சல், தூக்கமின்மை, உணர்வு ரீதியான தொந்தரவு, உணவுப் பழக்கத்தில் மாற்றங்கள் ஆகியவற்றுக்கான அறிகுறிகளுடன் சேர்த்து பல்வேறு வகையான பதகளிப்புக்கும் ஆளாகியுள்ளனர்.[28]

## *பிள்ளை வளர்ப்பின் சவால்கள்*

பெருந்தொற்றின் முதலாவது அலையின் போது சமூக ஊடகங்கள் மூலமாகத் தீவிரமான உறவுகளை ஆரம்பித்த சில மாணவர்கள் தாம் ஏமாற்றப்பட்டதை அல்லது தவறாக வழிநடத்தப்பட்டதை அறிந்துகொண்டபோது தீவிரமான பதகளிப்புக் குறைபாடுகளுக்கு முகங்கொடுத்தனர். ஒன்லைன் கல்விக்கான சரியான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் பாடசாலை மாணவர்கள் தற்கொலை செய்துகொண்ட பல்வேறு ஊடகச் செய்திகளைக் காணக்கூடியதாக இருந்தது.[29]

தமது பிள்ளைகள் இணையத்துக்கு அடிமையாகியுள்ளதை எவ்வாறு கையாளலாம் என்பதைப் பெற்றோர்கள் அறியாதுள்ளனர். இணையத்தில் விளையாடும் விளையாட்டுக்களால் பல அறிவுசார் பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுகின்றன. தமது பிள்ளைகள் முழு முடக்கத்தின் காரணமாகவும் ஒன்லைன் வகுப்புக்களின் காரணமாகவும் குழப்பமாக இருப்பதாகப் பெற்றோர்கள் எண்ணுகின்றனர். தமது வாழ்க்கை ஓர் இடத்தில் சிக்கிவிட்டதாக அந்தப் பிள்ளைகள் நினைக்கின்றனர். அரசாங்கம் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவதில்லை என்பதுடன் பிரச்சினைகளைத் தீரப்பதற்கு அரசாங்கத்திடம் எவ்விதமான திட்டங்களும் இல்லை.

சில மாணவர்களின் பெற்றோர்களின் நிதி நிலைமை காரணமாக ஒன்லைன் வகுப்புக்குத் தேவையான சாதனங்களை அவர்களினால் வழங்க முடியாதுள்ளதால் அவர்களின் பிள்ளைகள் அப்பெற்றோர்கள் மீது ஆக்ரோஷமாக நடந்துகொள்கின்றனர். பெற்றோரும் கையறு நிலையில் இருக்கின்றனர். இது குடும்பத்தின் ஒற்றுமையிலும் அமைதியிலும் குழப்பத்தினை ஏற்படுத்தி மனவழுத்த மட்டத்தினை அதிகரித்து குடும்ப வன்முறைக்குக் கூடக் காரணமாகின்றது.[30] குடும்பச் சூழல் குழப்பப்படுகையில், அது பிள்ளைகள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களின் மனநல சுகாதாரத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இளம் பிள்ளைகளின் மத்தியில் அச்சமும் பதகளிப்பும் காணப்படுவது விரக்தி மற்றும் பதகளிப்பு ஆகியவை உயர் மட்டத்தில் நிலவுவதற்குக் காரணமாகின்றது. இந்தச் சூழமைவில் எதிர்காலச் சமுதாயம் ஆரோக்கியமானதாகவும் நன்கு கல்வி கற்றதாகவும் இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

## *போஷாக்குக் குறைவு*

பல பிள்ளைகளும் அவர்களின் பெற்றோர்களும் இலவச அல்லது கழிவு விலையில் வழங்கப்படும் உணவுகளிலும் பாடசாலையில் வழங்கப்படும் ஆரோக்கியமான மற்றும் போஷாக்கான உணவிலும் தங்கியுள்ளனர். இது கிராமப் பிரதேசங்களிலும் பெருந்தோட்டங்களிலும் குறிப்பாக உண்மையாகும். இங்கே பல மாணவர்கள் இலவச உணவுக்காகவே பாடசாலைக்கு வருகின்றனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்டமை மாணவர்களின் கல்விக்கான அணுகலை மாத்திரம் பாதிக்காது அவர்களின் போஷாக்கினையும் பாதித்துள்ளது. 2020 மார்ச் மாதத்தில் இருந்து மக்கள் கடுமையான நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றனர். பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கும் அவர்களுக்கு உணவு வழங்குவதற்கும் இடையில் பெற்றோர்கள் சமரசம் செய்யும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

அரசாங்கம் ஈற்றில் கல்வித் தொலைக்காட்சியினையும் வானொலிச் சேவைகளையும் அறிமுகப்படுத்தினாலும்,[31] எல்லோராலும் ஒரே அணுகலைப் பெற முடிவதில்லை அல்லது ஒரே சேவைகளைப் பெற முடிவதில்லை.[32] ஒன்லைன் கல்வி மற்றும் கல்வித் தொலைக்காட்சி தொடர்பான விடயங்களைச் சில அறிஞர்கள் கோடிட்டுக்காட்டியுள்ளனர். ஒன்லைன் கல்வி பற்றியோ அல்லது தொலைக் கல்வி பற்றியோ தீவிரமான விவாதம் எதுவும் நடைபெறுவதில்லை. மாணவர்கள் அவர்களின் எதிர்கால இலக்குகளை அடைவது தொடர்பாகக் கொண்டுள்ள அச்சம் அதிகரித்துள்ளமை பெருந்தொற்றின் மூன்றாம் அலையின்போது மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர்கள் மத்தியிலும் மேலும் குழப்பங்களை ஏற்படுத்தி பதகளிப்பினையும் ஏற்படுத்தியுள்ளது.

ஏதோ ஓரளவு நடத்தப்பட்டுக்கொண்டிருந்த ஒன்லைன் வகுப்புக்களையும் ஆசிரியர்களின் பணிநிறுத்தம் முடக்கிவிட்டது. ஆசிரியர்களுக்கு உண்மையிலேயே பிரச்சினைகள் உள்ளன மேலும் அவர்கள் தமது வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கான அடிப்படை உரிமையினைக் கொண்டுள்ளனர். ஆனால், இந்த

உரிமைகள் இப்போது கல்விக்கான மாணவர்களின் அடிப்படை உரிமைகளுடன் மோதுகின்றன. எனவே இந்த இரண்டு பிரச்சினைகளிலும் அதிகாரிகள் சமமான கவனத்தினைச் செலுத்தவேண்டும்.

## *கல்வி ஓர் அடிப்படை மனித உரிமையாகும்*

கல்வி என்பது ஓர் அடிப்படை மனித உரிமையாகும் என்பதுடன் ஏனைய அனைத்து மனித உரிமைகளையும் அமுல்படுத்துவதற்கும் அவசியமானதாகும். கல்வி தனிப்பட்ட சுதந்திரத்தினையும் வலுவூட்டலையும் மேம்படுத்தி கணிசமான அபிவிருத்தி நலன்களை வழங்குகின்றது.

மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனம் கல்விக்கான உரிமையினை அடிப்படை மனித உரிமையாக அங்கீகரித்துள்ளது. [33] “*மனித ஆளுமையின் பூரண விருத்திக்காக கல்வி நெறிப்படுத்தப்படலாம் மேலும் மனித உரிமைகளினதும் அடிப்படைச் சுதந்திரங்களினதும் வலுப்படுத்தலுக்கும் நெறிப்படுத்தப்படலாம்* ...” என்பதற்கான ஏற்பாட்டினை உறுப்புரை 26 இன் உபவாசகம் (2) வழங்குகின்றது.

கல்விக்கான உரிமை பல்வேறு சர்வதேச சமவாயங்களில் ஓர் மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கல்விக்கான உரிமையினை அங்கீகரித்த முதலாவது சர்வதேசப் பொருத்தனை 1960 ஆம் ஆண்டின் கல்வியில் மாற்றங்களுக்கு எதிரான யுனெஸ்கோ சமவாயமாகும்.(CADE). கல்வியில் காட்டப்படும் பாகுபாட்டினை இது களைவதுடன் கல்வியில் சமத்துவத்திற்கான வாய்ப்புக்களையும் இலவச ஆரம்பக் கல்விக்கான வாய்ப்பினையும் இரண்டாம்நிலைக் கல்விக்கான சாராசரி அணுகலையும் தனிப்பட்ட ஆளுமையின் அடிப்படையிலான உயர்கல்வியினையும் கல்விக்கான சிறுபான்மைக் குழுவினரின் உரிமையினையும் எடுத்துக்கூறுகின்றது.

பின்வருவனவற்றில் கல்வி அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது:

அ.பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் (ICESCR): இது உறுப்புரைகள் 13 மற்றும் 14 இன் மூலம் கல்விக்கான உரிமையினைப் பற்றிப்பிடிக்கின்றது. இது பின்வரும் ஏற்பாட்டினை வழங்குகின்றது “*ஒப்பந்தத்தின் தரப்பாக மாறிய ஒவ்வொரு அரச தரப்பும், இதில் தரப்பாக மாறிய தருணத்தில் இருந்து, அதன் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் நகரப் பிராந்தியங்களிலும் ஏனைய பிராந்தியங்களிலும் கட்டாய ஆரம்பக் கல்வியினை இலவசமாகப் பெற முடியாதிருந்தால், இரண்டு வருடங்களினுள், அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வியினை வழங்குதல் எனும் கோட்பாட்டினை நிறைவேற்றும் திட்டத்தினுள் உள்வாங்கி அதனை நியாயமான வருட காலத்தில் படிப்படியாக அமுல்படுத்துவதற்கான ஒரு விரிவான திட்டத்தினை ஏற்று நடைமுறைப்படுத்தவேண்டும்.*”[34]

ஆ. சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989: உறுப்புரை *28(1).* அரசுகள் தரப்புக்கள் “*கல்விக்கான சிறுவர் உரிமையினை, குறிப்பாக இந்த உரிமையினைப் படிப்படியாகவும் சமமான வாய்ப்பு என்னும் அடிப்படையிலும் அடைந்துகொள்ளுதல்*” என அங்கீகரிக்கின்றன.

இ. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் 1966[35], உறுப்புரை 18(4) இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகச் சிறுவர்களுக்கு அறம் சார்ந்த கல்வியினையும் சமயக் கல்வியினையும் வழங்குவதில் பெற்றோர்கள் கொண்டுள்ள சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது - “*தமது சொந்தப் பற்றுறுதிக்கமைவாகத் தங்களின் பிள்ளைகளின் சமயக் கல்வியினையும் அறநெறிக் கல்வியினையும் உறுதிப்படுத்துவதற்கான பெற்றோரினதும், மேலும் பிரயோகிக்கத்தக்கதாக இருக்கையில், சட்டபூர்வமான பாதுகாவலர்களினதும் சுதந்திரத்தை மதிப்பதற்கு சமவாயத்தின் தரப்புகளான அரசுகள் பொறுப்பேற்கின்றன*”[36].

ஈ. அனைத்துப் புலம்பெயர் தொழிலாளர்களதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களதும் உரிமைகளைப் பாதுகாத்தல் பற்றிய சமவாயம் - (1990) அதன் உறுப்புரை 12(4) இல் பின்வருமாறு உள்ளடக்கியுள்ளது. குறைந்தது ஒருவர் புலம்பெயர் தொழிலாளராக இருக்கின்ற பெற்றோர்கள், பிரயோகிக்கத்தக்கவிடத்து சட்டரீதியான பாதுகாவலர்கள் அவர்களின் சொந்தப் பற்றுறுதிக்கு இயைபுற்றுப் பிள்ளைகளின் சமய மற்றும் அறநெறிக் கல்வியினை உறுதிப்படுத்துவதற்கான அவர்களின் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்க அரசுகள் பொறுப்பேற்கவேண்டும். உறுப்புரைகள் 30 மற்றும் 45(1) ஆகியவை புலம்பெயர்ந்தவர்களின் பிள்ளைகள் கல்வியினை அணுகக்கூடியவர்களாக உள்ளனர் என்பதை உறுதிப்படுத்துவதுடன் தொடர்புடைய ஏனைய ஏற்பாடுகளாகும்.

உ. பெண்களுக்கெதிரான அனைத்து வடிவிலுமான பாகுபாட்டினை இல்லாதொழிப்பது பற்றிய சமவாயம் 1979 இவற்றுள் ஒன்றாகும்: *அரசியல் மற்றும் பொது வாழ்விற்கான பெண்களின் சமமான அணுகல் மற்றும், வாக்களிப்பதற்கான மற்றும் -தேர்தல்களில் போட்டியிடுவதற்கான உரிமை உள்ளிட்ட-பெண்களுக்கான சமமான வாய்ப்புக்கள் அத்துடன் கல்வி ஆகியவற்றினை உறுதிப்படுத்துவதன் மூலம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் சமத்துவத்தினை அடைவதற்கான அடிப்படையினை இது வழங்குகின்றது*[37].

ஊ. அங்கவீனமான நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயம், (2006), அங்கவீனமான நபர்களின் கல்விக்கான உரிமையினை அங்கீகரிக்கின்றது. கல்விக்கான பொது முறைமைக்கான அணுகல் மறுக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதன் மூலமும் அவர்களுக்கு உள்ளடக்கும் தன்மை மிக்க தரமானதும் இலவசமானதுமான அடிப்படைக் கல்வியினை வழங்குவதன் மூலமும் சமமான வாய்ப்பின் அடிப்படையில், பாகுபாடின்றி அவர்களின் கல்விக்கான உரிமையினைப் பூர்த்திசெய்யவேண்டும்.

மேற்குறிப்பிட்ட அனைத்துச் சமவாயங்களையும் ஐக்கிய நாடுகளில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, எச்சூழ்நிலைகளின் கீழும் எவ்வித பாகுபாடும் இன்றி, கல்விக்கான உரிமை உள்ளடங்கலாக மனித உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்துவதற்கான கடப்பாட்டினை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது. அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளினுள் கல்விக்கான சர்வசன உரிமையினையும் இலங்கை அரசியலமைப்பு உள்ளடக்குகின்றது. இலவச சர்வசனக் கல்விக்கான உரிமை ஓர் அடிப்படை உரிமையாக கூட்டிணைக்கப்படாவிட்டாலும் அது சமூக ஒப்பந்தத்தின் இன்றியமையாத ஒரு பாகமாக இருக்கின்ற காரணத்தினால் 1945 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை இலவச சர்வசனக் கல்வியினை வழங்கிவருகின்றது.[38]

ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக, பல சிறுவர்கள் அவர்களின் கல்விக்கான உரிமையினைப் பூரணமாக அடைந்து கொள்ளாது போராடி வருகின்றனர். இது அவர்களின் வாழ்க்கை வாய்ப்புக்களைப் பாதிக்கும். இது நாட்டின் அபிவிருத்தி வாய்ப்புக்களையும் பாதிக்கும் என்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் தீவிர கவனத்தினைச் செலுத்தவேண்டும்.

கொவிட் 19 பெருந்தொற்றின் போது உருவான கல்விச் சவால்களுக்கு பதிற்செயற்பாடாற்றுவதற்கு ஓர் உபாயமார்க்கமிக்க திட்டத்தினை உருவாக்குமாறும் தரமான கல்விக்கான அனைத்து மக்களின் அணுகலையும் மேம்படுத்தத் தேவைப்படும் பொருத்தமான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால முதலீடுகளை மேற்கொள்ளுமாறும் நாம் அரசாங்கத்தினை வேண்டுகின்றோம்.

உயர் கல்விக்கும் துரித பொருளாதார அபிவிருத்திக்கும் அரசாங்கம் கொண்டுள்ள அபிலாஷைகளை நாம் அவதானிக்கின்றோம். இது கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டம் (KDU சட்டம்) மற்றும் துறைமுக நகரச் சட்டம் ஆகியவற்றில் பிரதிபலித்ததுடன் இவை நிர்மாணத் துறையிலும் நிதித் துறையிலும் சேவைத் துறைகளிலும் பணியாற்றுவதற்குப் பயிற்றப்பட்ட உயர் திறன் கொண்ட மாணவர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்த யதார்த்தத்திற்கு இசைந்துகொடுப்பதற்குப் பெற்றோர்களினதும் மாணவர்களினதும் ஆற்றல்களை இயலச் செய்வதற்காகப் பாரிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேவேளை, நிறுவப்பட்டுள்ள கல்விக் கட்டமைப்புகளும் வலுப்படுத்தப்படவேண்டும்.

## மூலங்கள்


[1] Burgess S & Sievertsen H.H. (2000). “Schools, skills, and learning: The impact of COVID-19 on education”, *CEPR-Research-based policy analysis and commentary from leading economists,* Available at:https://voxeu.org/article/impact-covid-19-education [Accessed 10th July 2021]

[2] All school in Sri Lankan closed from tomorrow until April 20,2020. Colombopage.com. [Internet]Available at: <http://www.colombopage.com/archive_20A/Mar12_1584022514CH.php> [Accessed 10 July 2021].

[3] New schedules for Schools to Reopen from Aug 10.Ada Derana.[Internet]. July 30, 2020, Available at http://www.adaderana.lk/news/65968/new-schedules-for-schools-to-reopen-from-aug-10

[4] All schools close from August 5th. Adaderana, Sinhala [internet]. August 04, 2020, Available at: http://sinhala.adaderana.lk/news.php?nid=143803

[5] All Universities to be Temporarily Closed over Coronavirus Fears. Ada Derana.[Internet].March 13, 2020, Available at http://www.adaderana.lk/news/61355/all-universities-to-be-temporarily-closed-over-coronavirus-fears

[6] Annual School Census of Sri Lanka, Final Report. Statistics.gov.lk. [Internet] 2020,Available at: <http://www.statistics.gov.lk/Education/StaticalInformation/SchoolCensus/2020> [Accessed 19 July 2021].

[7] 2021 A/L, O/L and Grade 5 Scholarship Exams Postponed. Ada Derana. [Internet]. April 9, 2020, Available at http://www.adaderana.lk/news/72933/2021-al-ol-and-grade-5-scholarship-exams-postponed

[8] De Silva, N. COVID-19 and Online education in Sri Lanka: Can we do it Better? Daily FT. [Internet], 2021, Available at: https://www.ft.lk/opinion/COVID-19-and-online-education-in-Sri-Lanka--Can-we-do-it-better-/14-719254 [Accessed 13 July 2021].

[9] Gangahagedara, Ruchira; Karunarathna, Muditha; Athukorala, Wasantha; Subasinghe, Shyamantha; and Ekanayake, Prabath. Emergency Teaching–Learning Methods (ETLM) during COVID-19: Available at Lessons Learned from Sri Lanka.MDPI.[Internet], September 24, 2021, Available at https://www.mdpi.com/2227-7102/11/10/579/htm

[10] Jayawardena, Eranga. AP Photos: In Sri Lanka, a Dangerous Climb for Online Schools. AP news.[Internet], July 13, 2021, Available at https://apnews.com/article/lifestyle-health-education-coronavirus-pandemic-sri-lanka-6f822d1e3d78314d4505cf1dde747e15

[11] Abayasekara, A. Building a Crisis-Resilient Education System in Sri Lanka. Development Asia. [Internet] 2021. Available at:

https://development.asia/insight/building-crisis-resilient-education-system-sri-lanka [Accessed 18 July 2021]

[12] Online Teaching During Pandemic Period a Complete Failure: Teachers' Service Union. Daily Mirror. [Internet] Nov 23, 2020, Available at https://www.dailymirror.lk/breaking_news/Online-teaching-during-pandemic-period-a-complete-failure-Teachers-Service-Union/108-200373

[13] Jayawardena, Eranga. AP Photos: In Sri Lanka, a Dangerous Climb for Online Schools. AP news.[Internet] July 13, 2021, Available at https://apnews.com/article/lifestyle-health-education-coronavirus-pandemic-sri-lanka-6f822d1e3d78314d4505cf1dde747e15

Jayawardena, Eranga. In Sri Lanka, a Dangerous Climb for online School. Akansas Democrat Gazette. [Internet]. July 17, 2021, Available at https://www.arkansasonline.com/news/2021/jul/17/in-sri-lanka-a-dangerous-climb-for-online-school/?news

[14] Sri Lankan Children Make a Dangerous Climb for Online School. Aljazeera.[Internet]. July 13, 2021, Available at https://www.aljazeera.com/gallery/2021/7/13/sri-lankan-children-make-a-dangerous-climb-for-online-school

[15] Hayashi, R., Garcia, M., Jayasundara, H. and Hirokawa, T. COVID-19 Impact on Technical and Vocational Education and Training in Sri Lanka. [Internet]. 2021, Asian Development Bank. Available at: https://www.adb.org/publications/covid-19-impact-tvet-training-sri-lanka [Accessed 6 July 2021].

[16] Rameez, A., Fowsar, M. and Noohu, L., Impact of Covid-19 on Higher Education Sectors in Sri Lanka: A Study based on South Eastern University of Sri Lanka. [Internet], 2020, Research Gate. Available at: <https://www.researchgate.net/publication/346095674_Impact_of_Covid-19_on_Higher_Education_Sectors_in_Sri_Lanka_A_study_based_on_South_Eastern_University_of_Sri_Lanka> [Accessed 8 July 2021]

[17] G.C.E.A/L Advance Level Exam. Business News.lk. [Internet] June 24, 2021 https://www.businessnews.lk/tag/g-c-e-a-l-advance-level-exam/ [Accessed 10 September 2021]

[18] A/L Candidates Permitted to Use Non-Programmable Calculators Tomorrow. Business News.lk. [Internet] October 30, 2020, Available at https://www.businessnews.lk/2020/10/30/a-l-candidates-permitted-to-use-nonprogrammable-calculators-tomorrow /

[19] A/L Candidates Permitted to use Nonprogrammable Calculators Tomorrow. Business New.lk. [Internet] October 30, 2020, Available at https://www.businessnews.lk/2020/10/30/a-l-candidates-permitted-to-use-nonprogrammable-calculators-tomorrow /

https://www.businessnews.lk/2021/06/24/application-for-a-l-result-re-corrections-only-through-online-department-of-examinations/

[20] Application for A/L Result Re-corrections Only Through Online – Department of Examinations. Daily Mirror.[Internet]. June 24, 2021, Available at https://www.dailynews.lk/2020/10/20/local/231919/plans-conduct-university-exams-online-ugc-chairman

[21] https://www.ugc.ac.lk/attachments/2235_Commission%20Circular%20No.11_2020%20English.pdf

[22] Based on the cases reported to the counsellors

[23] Wickremasinghe, Kamanthi. Internet Gaming Disorder: Are We Too Late? Daily Mirror . [Internet]. September 10, 2021, Available at thttps://www.dailymirror.lk/print/medicine/Internet-Gaming-Disorder-Are-we-too-late/308-220057

[24] Fonseka, Piyumi. Porn and Nudes: Delving into Cyber Exploitation in Sri Lanka. Daily Mirror.[Internet].Feb 25, 2021, Available at https://www.dailymirror.lk/news-features/porn-and-nudes-delving-into-cyber-exploitation-in-sri-lanka/131-206532

[25] **Wickramasinghe , Kamanthi.** Sexual Exploitation of a 15 Year Old Girl: Police Investigations Underway. Daily Mirror. [Internet], July 2, 2021, Available at https://www.dailymirror.lk/recomended-news/Sexual-exploitation-of-a-15-year-old-girl-%3A-Police-investigations-underway/277-215235

[26] Ellepola, A. Foreseeable Psychological Impact of COVID 19 in Sri Lanka. Research Gate. [Internet].Available at: <https://www.researchgate.net/publication/340522703_Foreseeable_psychological_impact_of_COVID_19_in_Sri_Lanka> [Accessed 8 July 2021].

[27] Psychosocial Impact of COVID-19. US National Library of Medicine. [Internet]. Available at https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC7255207/

[28] How is COVID-19 Pandemic Impacting Mental Health of Children and Adolescents? US National Library of Medicine. [Internet], September 10, 2020, Available at https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC7481176/

[29] Grade-10 Student Commits Suicide as He Could Not Log into Online Classes. Daily Mirror.[Internet] Jul 20, 2021, https://srilankamirror.com/news/23918-grade-10-student-commits-suicide-as-he-could-not-log-into-online-classes

[30] Jayaratne, Hiruni. Online Predators: Risk of Exposing Children During Covid. Colombo Telegraph.[Internet] July 16, 2021, Available at

19https://www.colombotelegraph.com/index.php/online-predators-risk-of-exposing-children-during-covid-19/

[31] Waravita, Pamodi. 'Planning Could have Cushioned the Pandemic's Impact on Education.' The Morning. [Internet] July 27, 2021, Available at https://www.themorning.lk/planning-could-have-cushioned-the-pandemics-impact-on-education/

[32] Two Education Channels from Today. Daily News. [Internet] April 20,2020, Available at https://www.dailynews.lk/2020/04/20/local/216800/two-education-channels-today

[33] Universal Declaration of Human Rights. United Nations. [Internet] n.d. Available at: <https://www.un.org/en/about-us/universal-declaration-of-human-rights> [Accessed 8 August 2021].

[34] International Covenant on Economic, Social and Cultural Rights. OHCHR. [Internet] n.d. Available at: <https://www.ohchr.org/en/professionalinterest/pages/cescr.aspx> [Accessed 5 August 2021

[35] International Covenant on Civil and Political Rights. OHCHR. [Internet] n.d. Available at: <https://www.ohchr.org/en/professionalinterest/pages/ccpr.aspx> [Accessed 13 July 2021].

[36] Universal Declaration of Human Rights United Nations. United Nations. [Internet] n.d. Available at: <https://www.un.org/en/about-us/universal-declaration-of-human-rights> [Accessed 8 August 2021].

[37] Treaty bodies. OHCHR [Internet] n.d. Available at: <https://tbinternet.ohchr.org/_layouts/15/TreatyBodyExternal/Treaty.aspx?CountryID=164&Lang=EN> [Accessed 28 July 2021]

[38] 1945 Free Education Policy in Sri Lanka. United Nations. [Internet]. Available at: <https://lk.one.un.org/7060/en/free-education-policy-in-sri-lanka>[Accessed 08 September 2021]